**சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் ("கம்பனி") 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**விடயத்தை வலியுறுத்துதல்**

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்தியங்குவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பாக குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டினை ஏற்படுத்தக்கூடிய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருப்பதைக் குறிக்கின்ற நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 2.7 இற்கு கவனத்தை ஈர்க்கிறேன். எனினும், கம்பனியின் இறுதிப் பெற்றோர் கம்பனிக்கு நிதி உதவியை வழங்குவதற்கு இணங்கியிருந்தனர், அத்தகைய காலம் வரை கம்பனி தாமாகவே நிதியளிக்க முடியும். எனவே, நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பான எனது அபிப்பிராயம் மாற்றப்படவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தானியங்கு முறைமைக்கு பதிலாக, பொருளிருப்பு முகாமைத்துவம் மற்றும் பதிவுகளை வைத்திருப்பதற்கு கம்பனி கைமுறையிலான முறைமையைப் பயன்படுத்துகிறது, இது பொருளிருப்பு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய ஆபத்தை அதிகரிக்கும். | குறித்துக் கொள்ளப்பட்டது. பொருளிருப்புக்களுக்கான கைமுறையிலான நடைமுறையை நாங்கள் பின்பற்றுவதால், பொருளிருப்பு முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒவ்வொரு ஓய்வு இல்லத்திற்கும் உரிய வதிவிட முகாமையாளரிடம் உள்ளது. கம்பனியின் அளவு மற்றும் இயலளவு மற்றும் மையப்படுத்தப்பட்ட எமது முறைமை மென்பொருளின் | பொருளிருப்பு முகாமைத்துவம் தொடர்பாக தற்போதுள்ள முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்வதற்கும், பொருளிருப்பு நகர்வுகளை கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டுப்படியாகாத தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நாங்கள் அதையே பின்பற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். எனினும், தலைமை அலுவலக மட்டத்தில், பொருளிருப்பு மட்டத்தை மாதந்தம் மேல்நிலைப் பார்வையுடன் கண்காணிக்கிறோம். கம்பனிக்கு புதிய கணனிமயமாக்கப்பட்ட முறைமையொன்றை அறிமுகப்படுத்தும் வரை, தற்போதுள்ள கைமுறையிலான நடைமுறைகளின் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கும், பொருளிருப்புக்களுடன் தொடர்புடைய அபாயத்தைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம். | பொருளிருப்பு தொகுதிகளை செயற்படுத்துவதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | விருந்தினர் இல்லங்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக விருந்தினர் இல்லங்கள் மீது கம்பனி மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு முறைமையொன்றை செயற்படுத்தியிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டது. நாம் தற்போது பயன்படுத்தும் முன்பதிவு முறைமை அளவு மற்றும் இயலவுகளைக் கருத்தில் கொண்டு போதுமானதாகும். விடுமுறை இல்லங்களின் பராமரிப்பாளர்களைக் கண்காணிப்பதற்காக, தலைமை அலுவலகத்திலிருந்து திடீர் விஜயங்கள் மற்றும் உள்ளூர் இலங்கை வங்கி அதிகாரிகளிடமிருந்து உதவியைப் பெறுவதன் மூலம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அபாயத்தைத் தணிக்கிறோம். மேலும், CCTV ஐ நிறுவும் பணியில் இலங்கை வங்கி ஈடுபட்டுள்ளது, இது பராமரிப்பாளர்களைக் கண்காணிப்பதற்கு எங்களுக்கு உதவும். | விருந்தினர் இல்லங்களில் உள்ள மோசடி ஆபத்தில் இருந்து தடுப்பதற்கு விருந்தினர் இல்லங்களிற்கு மையப்படுத்தப்பட்ட முன்பதிவு முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | விழா முற்பணங்களில் அறிக்கையிடப்பட்ட திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்காத ரூபா 156,625 கூட்டுத்தொகையான நீண்டகால நிலுவை மீதிகள் உள்ளடங்குகின்றன. ஊழியர்கள் ஏற்கனவே கம்பனியில் இருந்து இராஜினாமா செய்துள்ளதால், இந்த முற்பணங்களின் அறவிடும் தன்மை சந்தேகத்திற்குரியதாக உள்ளது. அறவிடப்படமுடியாத விழா | ரூபா 156,625 தொகையான இந்த விழா முற்பணங்கள் 2020 இற்கு முன்னர் நிலுவையாக உள்ளது, அப்போது 5 ஆண்டுகளுக்கும் குறைவான சேவையில் உள்ள ஊழியர்களுக்கும் விழா முற்பணம் அனுமதிக்கப்பட்டது. இதன் விளைவாக, அத்தகைய | அறவிடும் தன்மை சந்தேகத்திற்குரியதாக இருந்தால் மீதியை பதிவழிப்பதற்கும் பெறவேண்டிய மீதிகளுக்கு போதுமான பின்தொடர் நடவடிக்கை இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு சரியான கட்டுப்பாட்டை அமுலப்படுத்துவதற்கும் |

முற்பணங்களின் வயதுப் பகுப்பாய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| காலப்பகுதி | தொகை (ரூபா.) |
|---|---|
| 2000 - 2005 | 24,900 |
| 2006 - 2010 | 8,100 |
| 2011 - 2015 | 44,875 |
| 2016 - 2020 | 78,750 |
| **மொத்தம்** | **156,625** |

ஊழியர்கள் தமது சம்பளத்தைப் பெற்ற பின்னர் எந்த அறிவிப்பும் இன்றி இராஜினாமா செய்யும் போது, விழா முற்பணத்தை அறவிடுவதற்கு அவர்களுக்கு செலுத்தவேண்டிய (பணிக்கொடை போன்றவை) கொடுப்பனவு எதுவும் காணப்படுவதில்லை. தற்போது நாங்கள் கொள்கையை மாற்றியுள்ளதுடன் 5 ஆண்டுகளுக்கு மேலாக சேவையில் உள்ள பதவியணியினர் மாத்திரமே விழா முன்பணத்திற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர். எனவே, 2021 ஆம் ஆண்டில் இந்தத் தொகைக்கு நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம், மேலும் எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கான வாய்ப்பு காணப்படவில்லை என்றால், மேற்படி தொகையை பதிவழிப்பதற்குத் தேவையான அங்கீகாரத்தை (சபை அங்கீகாரம்) பெற்றுக்கொள்வோம்.

பரிந்துரைக்கப்படுகிறது.

(ii) ரூபா 1,687,931 வியாபார கடன்பட்டோர் மீதியானது மூன்று மாதங்களுக்கும் மேற்பட்ட காலத்திலிருந்து வருகிற ரூபா 740,821 நீண்டகால நிலுவை மீதியை உள்ளடக்குகிறது. நீண்டகால நிலுவை கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு கம்பனியால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. கடன்பட்டோர் மீதியின் வயது பகுப்பாய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அறவிடப்படக்கூடிய கடன்பட்டோர் மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்பதுடன் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு நீண்டகால நிலுவை கடன்பட்டோர் மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| காலப்பகுதி | நிலுவை மீதி (ரூபா.) |
|---|---|
| 0-30 நாட்கள் | 580,400 |
| 31-90 நாட்கள் | 366,710 |
| 91-180 நாட்கள் | 16,425 |
| 181-365 நாட்கள் | 125,340 |
| ஒரு ஆண்டிற்கு மேற்பட்டவை | 599,056 |
| **மொத்தம்** | **1,687,931** |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 422,044 நீண்டகால நிலுவை வற் (VAT) மீதி அவதானிக்கப்பட்டது. | குறித்துக் கொள்ளப்பட்டது. இக் காலப்பகுதியில் மூன்று முறை வற் விகித சதவீதம் மாற்றப்பட்டதால் இது இடம்பெற்றுள்ளது. எனவே, மேலதிக தொகையை உள்நாட்டு இறைவரியிடமிருந்து மீளப்பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம் அல்லது எந்த நேரத்திலும் வற்றிற்காக நாங்கள் பொறுப்பேற்றால், நாங்கள் ஈடுசெய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம். | அறவிடும் தன்மை சந்தேகத்திற்குரியதாக இருந்தால் மேலதிக தொகையை அறவிடுவதற்கு அல்லது மீதியை பதிவழிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 26.7 மில்லியன் தொகையான நட்டமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 33.4 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், நட்டத்தில் ரூபா 6.7 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு செலவினங்கள் 17 சதவீதத்தால் குறைவடைந்தமை மீளாய்வாண்டில் நட்டம் குறைவடைந்தமைக்கான பிரதான காரணங்களாகும்.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **வேறுபாட்டு தொகை அதிகரிப்பு/ (வீழ்ச்சி) (ரூபா)** | **வேறுபாடு %** | **வேறுபாட்டிற்கான காரணம்** |
|---|---|---|---|
| உணவக வருமானம் | (6,899,115) | (27) | 2021 ஏப்ரல் இறுதியில் இருந்து 2021 ஒக்தோபர் வரை விதிக்கப்பட்ட கொவிட் கட்டுப்பாடுகளின் காரணமாக ஓய்வு மற்றும் விடுமுறை இல்லங்கள் கிட்டத்தட்ட மூடப்பட்டு காலியாக இருந்ததுடன் இது வருமானம் குறைவடைவதற்கு முக்கிய காரணமாகும். |
| முன்பதிவு வருமானம் | (3,036,015) | (14) | |
| விற்பனைக் கிரயம் | (5,098,884) | (14) | கொவிட் கட்டுப்பாடுகள் காரணமாக 2021 ஏப்ரல் முதல் 2021 ஒக்தோபர் வரை ஓய்வு மற்றும் விடுமுறை இல்லங்கள் மூடப்பட்டதே இதற்குக் காரணம். |
| முகாமைத்துவக் கட்டணம் | 1,794,875 | 11 | 2020 நவம்பர் முதல் 2021 ஏப்ரல் வரை BOC தலைமை அலுவலக உணவகம் கம்பனியால் நடாத்தப்பட்டது, இதற்காக நாங்கள் 2021 ஆம் ஆண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 1.8 மில்லியன் தொகையை முகாமைத்துவக் கட்டணமாகப் பெற்றோம். |
| நிர்வாக செலவினங்கள் | (9,670,390) | (17) | 2021 ஆகஸ்ட் மாதத்தில் நுவரெலியா நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதன் விளைவாக நிர்வாகச் செலவினத்தில் ரூபா 6.1 மில்லியன் குறைவடைந்துள்ளது. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டுக்கான கம்பனியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **ஆண்டு** | |
|---|---|---|
| | **2021** | **2020** |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | |
| மொத்தலாப விகிதம் (சதவீதம்) | 41 | 41 |
| தேறியலாப விகிதம் (சதவீதம்) | (48) | (53) |
| மொத்த சொத்துக்கள் மீதான திரும்பல் | (62) | (56) |
| உரிமை மீதான திரும்பல் | (41) | (87) |
| **திரவத்தன்மை விகிதங்கள் (தடவைகளின் எண்ணிக்கை)** | | |
| நடைமுறை சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.15 | 0.19 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.12 | 0.16 |

கம்பனியின் தேறியலாபம், மொத்த சொத்துக்கள் மீதான திரும்பல் மற்றும் உரிமை மீதான திரும்பல் விகிதங்கள் மீளாய்வாண்டில் தேறிய நட்டம் எற்பட்டதன் காரணமாக எதிர்மறை புள்ளிவிபரங்களைக் காட்டுகின்றன. கம்பனி போதுமான திரவத்தன்மை விகிதங்களைப் பேணத் தவறியிருந்தது, மேலும் இது கம்பனியின் தொழிற்படு மூலதனச் சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நுவரெலியா B1/B2 விடுமுறை பங்களாக்கள் மற்றும் கண்டி விடுமுறை பங்களா என்பன முறையே 2018 மற்றும் 2019 முதல் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த பங்களாக்கள் 2018 ஆம் ஆண்டில் ரூபா 1.4 மில்லியன் பெறுமதியான வருமானத்தை ஈட்டியிருந்தன, மேலும் புனரமைப்புப் பணிகளை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்படுவதால் ஒவ்வொரு வருடமும் அத்தகைய தொகையிலான வருமானத்தை கம்பனி இழந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது. | B1/B2 விடுமுறை பங்களா செயற்பாடுகள் 2022 மே முதல் தொடங்கப்பட்டுள்ளது. எனினும், கண்டி விடுமுறை பங்களா இன்னும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது, எங்களிடம் அதற்கான எந்த கட்டுப்பாடும் காணப்படவில்லை. | புதுப்பித்தலை விரைவுபடுத்துவதற்கும், வணிக செயற்பாடுகளிற்காக பங்களாக்களை கிடைக்கசெய்வதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. |